தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உரு | திருவள்ளுவர் யாண்டு கக௲அ௰ புரட்டாசி 1949—செப்டம்பர் | மலர் சா

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

கலைமகள் விழா

அன்பரீர்,

தமிழ்த் தாயின் தண்ணருளால், நம் சங்கக் **கலைமகள் விழா**, நாளது புரட்டாசித் திங்கள், சுஆம் நாள் (22—9—49), வியாழக் கிழமை, மாலை ரு (5) மணிக்குக் **கால்கோள்** முதல், ௰ருஆம் நாள் (1—10—49) சனிக் கிழமை **பரிசளிப்பு** வரை நிகழ்ச்சி நிரல்களில் கண்டவாறு நடைபெறும்.

இவ்விழா நிகழ்ச்சிகளுக்கும், புரட்டாசி ௩ஆம் நாள் (19—9—49) திங்கட் கிழமை மாலை 6-மணிக்கு நடைபெறும் விழா முன் நிகழ்ச்சி யாகிய மாணவ மாணவிகளின் **இலக்கியப் பயிற்சிப் போட்டி** ஐம்பேராயத்தார் முன் நிகழும்போதும் தாங்கள் தமிழன்பர்களுடன் வந்திருந்து மகிழவேண்டுகின்றேன்.

அன்புள்ள,

ஆ. யா. அருளானந்தசாமி நாடார்,

தலைவர்.

உ

கலைமகள் விழா முன் நிகழ்ச்சி

நாள் :

புரட்டாசி, ௩ (19–9–49), திங்கட் கிழமை

நேரம் :

மாலை 6 மணி

நிகழ்ச்சி :

சங்கக் கல்வி நிலையங்களின் மாணவ மாணவிகளின் இலக்கியப் பயிற்சிப் போட்டிகள்

ஐம்பேராயத்தார் :

1. திருவாளர் வித்துவான் K. பாலகிருட்டினன் அவர்கள், தஞ்சை.
2. திருவாளர் த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான்.
3. திருவாளர் S. இராமச்சந்திரப் பத்தர் அவர்கள், தஞ்சை.
4. திருவாளர் A. சக்கரவர்த்தி முதலியார் அவர்கள், திருவையாறு.
5. திருவாளர் P. S. வேங்கடகிருட்டின பிள்ளை அவர்கள், தஞ்சை.

கலைமகள் விழா:

கால்கோள் நாள்.

நாள் : புரட்டாசி, சு (22-9-49), வியாழன், மாலை 5 மணி

தலைவர் : திருவாளர் கா. சங்கரவடிவேல் பிள்ளை யவர்கள்,
தஞ்சை மாவட்டத் தண்டல் தலைவர்.

பேருரையர்ளர் : திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை யவர்கள்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிவாளர்.

நிகழ்ச்சிகள் : மாணவ ரில்லத்திலிருந்து கலைமகள் திருவுருவப்படத்தை மாணவர் அணிவகுப்புடன் தமிழ்ப் பெருமன்றத்திற்கு எழுந்தருளுவித்தல்.

தமிழ்க்கொடி யேற்றம் :

திருவாளர் நீ. இராமலிங்க முதலியார் அவர்கள்,
நகராண்மைக் கழக ஆணையாளர், திருக்குடந்தை.

பேரவை : தமிழ்ப் பெரு மன்றம்

இறை வணக்கம்	—கல்லூரி மாணவர்
தமிழ்த்தாய் வாழ்த்து	,,
கலைமகள் வாழ்த்து	,,
வரவேற்புரை	—அமைச்சர்
தலைவர் முன்னுரை	—
விழா முதற் பேருரை	—'வழிபாடு'
ஆட்டம்	—திரு. மரகதவல்லியும், தோழியரும், உமாமகேசுவர நடுநிலைப் பள்ளி
தலைவர் பேருரை	
நன்றி	— அமைச்சர்
வாழ்த்து	—உமாமகேசுவர நடுநிலைப் பள்ளி மாணவர்

கலைமகள் விழா—இரண்டாம் நாள்

நாள் : புரட்டாசி, எ (23-9-49), வெள்ளி, மாலை 5 மணி

தலைவர்: திருவாளர் V.P. காயாரோகணம் பிள்ளை யவர்கள்,
பெருநிலக்கிழவர், நாகப்பட்டினம்.

பேருரையாளர் : திருவாளர் தி. மருதப்பா பிள்ளை யவர்கள்,
கூற்றத் தண்டல் தலைவர், திருக்குடந்தை.

நிகழ்ச்சிகள் : இறை வணக்கம் —கல்லூரி மாணவர்

வரவேற்பு —கல்லூரித் தலைவர்

தலைவர் முன்னுரை

பரிசில்பெறும் மாணவ மாணவிகள் செய்யுள் ஒப்பு
வித்தல்

இன்னிசைப் பாக்கள் —கல்லூரி மாணவர்

விழாப் பேருரை —'வித்தை விரும்பு'

தலைவர் பேருரை

நன்றி —கல்லூரி விரிவுரையாளர்

வாழ்த்து —உமாமகேசுவர நடுநிலைப்
பள்ளி மாணவர்.

(194-ஆம் பக்கம் பார்க்க.)

உவ நூல்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

தெய்வத்தோடு ஒப்பாரும்-பிறர் மனக் குறிப் பறியும் கருவியும்.

பிறருடைய மனக் குறிப்பை மக்களிற் பலரும் அறிந்து கொள்ளல் முடியாது. மக்கள் மனமும் செய்கையும் வேறு வேருக இருக்கின்றன என்று,

'யாஅ ரொருவ ரொருவர்த முள்ளத்தைத்
தேருந் துணைமை யுடையவர்—சாரற்
கனமணி நின்றிமைக்கும் நாடகேண் மக்கள்
மனம்வேறு செய்கையும் வேறு'

நாலடியாரின் செய்யுளால் சமண முனிவர் விளக்கி யுள்ளார். என்றாலும், மக்களில் மிகவும் நுட்பமான உணர்வினை யுடைய சிலர் மாத்திரம் அறியக் கூடிய ஆற்றல் உடையவ ராவர் என்பதே கருத்தாகக் கொள்க. அவ்வாறு பிறர் மனத்தில் நினைத்ததைச் ஐய மில்லாமல் உணரக் கூடிய வர்களைக் கடவுளுக்கு ஒப்பாக மதித்து நடந்துகொள் என்னும் பொருள் படத், திருவள்ளுவர் 'ஐயப் படாஅ தகத்த துணர்வானைத், தெய்வத்தோ டொப்பக் கொளல்.' என்றும், 'குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள், யாது கொடுத்துங் கொளல்.' என்றும் அருமையும் பெரு மையும் தோன்றக் கூறியுள்ளார்.

ஒருவர் உள்ளக் கிடக்கையை நுட்ப மன உணர்வின ராகிய கடவுளோ டொத்தவர் எக் கருவியால் அறி கின்றனர் எனின், முகக் குறிப்பும், கண்ணின் குறிப்புங் கொண்டே என்று ஆன்றோர் கூறுகின்றனர்.

'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்' என்றும்,

'நுண்ணிய மென்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்ல தில்லை பிற.' என்றும்,

கூறியுள்ளார்.

இவ் விருவகைக் கருவிகளுள்ளும், கண்ணே நுண் கருவியாகும். இதனைப் பரிமேலழகர், தமது விசேட வுரையில் குறித்திருப்பதால் உணரக்கூடும். இனி, உள்ள நிகழ்ச்சிகள் எவை என்று ஆராய்வோம். இதனை மெய்ப்பாடு என்பர் மேலோர். இம் மனக் குறிப்பை, (1) சிரிப்பு, (2) அழுகை, (3) இழிவு, (4) வியப்பு, (5) அச்சம், (6) வீரம், (7) வெகுளி, (8) உவகை என்று எட்டு வகையில் அடக்குவர்.

'நகையே யழுகை இளிவரன் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென்(று)
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப.'

எனத் தொல்காப்பியர் கூறியிருக்கின்றார். இவ் வெட்டினையும், இவ் வெட்டின் உட்பிரிவுகளையும், இவைபோன்ற பிற உள்ளக் குறிப்புக்களையும் தொல்காப்பியத்தின் கண்ணே, மெய்ப்பாட்டியல் என ஓரியலில், தொல்காப்பியர் விளக்கமாகக் கூறியுள்ளார் எனினும், இம் மெய்ப்பாட்டினை ஒராற்றானே உணர முடியும் என்பதும், அஃதும் நுட்பமான மன வுணர்வினை யுடைய சிலருக்கே முடியும் என்பதும்,

'கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதி னுணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னிய பொருள்கோள் எண்ணருங் குரைத்தே.'

எனத்தொல்காப்பியர் கூறுவதாலும், கண்ணினாலும் செவியினாலும் பொருத்தமுற அறியும் அறிவுடையார்க் கல்லது மெய்ப்பாட்டுப் பொருள் கொள்ளுதல் ஆராய்தற்கு அருமை யுடைத்து என்ற உரையாசிரியர் எழுதியுள்ள குறிப்பாலும் உணரக் கிடக்கின்றன.

இனி, இம் மெய்ப்பாட்டின் பிரிவுகளின் நுட்பங்களை அறிந்து சொல்லக் கூடிய அறிஞர் இல்லையா என்பதும் ஆராயவேண்டியது. பல்காற் பழகிய நுட்ப மனவுணர்வினை யுடையார் தமிழ்ச் செய்யுளின் பொரு ளாழத்தையும், உலகியற் றன்மையையும் நன்றாகத் தெரிந்திருப்பதுடன், அம்

பொருந்துமா?¹ (ரு)

வித்துவான் M. குஞ்சிதபாத தேசிகர்,
நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

உலகின்கண் உள்ள மொழிகளில் சிறந்தது தமிழ். இத் தமிழ்மொழி உண்மை கலந்த இயற்கை மொழி என்பதனை, மனிதனின் கருத்தை இயல் என்றும், இனிமை கலந்த குரலை இசை என்றும் கல்லாத மக்களும் உட்கருத்தையுணர்ந்து மெய்ப்பாடெய்தும் கூத்தை நாடகம் என்றும் இம்மொழி முப் பிரிவினையுடையது என்ற கொள்கையே விளக்கி நிற்கின்றது. இயற் றமிழின் சிறப்பை விளக்க வரும் கதை என்றாலே பெரியோர் சிறியோர் ஆகிய வேறுபாடின்றி யாவரும் விரும்பிக் கேட்பார்கள் என்பதைக் கூறவும்

மனப் பண்பையும் பெற்றுப், பல்காற் பழகிப், பின்னர் இம் மெய்ப்பாட்டை யாராயின் விளங்கும். பலகால் ஆராய்ந்து ஆராய்ந்து பார்ப்பின் விளங்காமற் போகா என்று இ. வை. அனந்தராமையர் கலித்தொகையின் பதிப்பில், குறித்துள்ளார்கள். நாடகக் கலைக்கும் இக் குறிப்புணர்தல் இன்றியமையாத தொன்றாகும். உணர்ந்தால்தான் உணர்விக்க முடியும். ஆகவே, இதுகாறும் கூறியவற்றால், பிறர் மனக் குறிப்பை நுட்ப அறிவினை யுடைய சிலரே அறிய முடியும் என்பதும், நுட்பவறிவினை யுடையவர்கள் கடவுளோடு ஒப்ப நன்கு மதிக்கத் தக்கவர்கள் என்பதும், பிறர் மனக் குறிப் பறிய முகமும் கண்ணும் கருவி என்பதும், உள்ள நிகழ்ச்சிகளை உணர்த்துவதை மெய்ப்பாடு என்று தொல்காப்பியர் கூறுவர் என்பதும், அவை எட்டு வகையில் அடங்கும் என்பதும், இவற்றின் விரிவுகள் எல்லாம் மெய்ப்பாட்டியலில் பரக்கக் காணலாம் என்பதும், மெய்ப்பாட்டின் நுட்பங்களைக் கற்றறிந்த நுட்ப முடையார் ஆராய்ந்து அறிந்து விரிவாக வெளியிட வேண்டியவர் என்பதும் அறியத் தக்கனவாம்.

வேண்டுமோ! இசையும் சிறிது இடை யிடையே சேர்த்து இசைத்தால், மேலும் பலரும் விரும்புகின்றனர் என்பது அறிந்ததொன்றே யாம்.

இவ் விசையோடு கூடிய கதையினைக் மண வீடு களிலே மகிழ்ச்சியாய் இருக்க நிகழ்த்தி வருகின்றதை யறிந்து மகிழாதவர் யார்?

இன்னிசையோடு கூடிய கதையே சரிவர முடிக்காமலும், இடையில் வரும் செய்யுளின் வடிவம் இன்னது இன்ன பொருளைப் பயக்கின்றது என்ற உணர்ச்சியே தோன்றுமல் இசை பாடியும், தெலுங்கு, கன்னட மொழிகளி லுள்ள பாட்டுக்களின் பொருளைப் புரிந்துகொள்ளாமலும், சொற் கூடப் பொருந்தாத முறையில் தன் இசை வெள்ளத்தில் இழுத்துச் செல்கின்ற (கதா காலக்ஷேபம்) இன்னிசை யிடையிட்ட கதை நடப்பதை யாவரும் நன்ருக அறிந்திருந்த போதிலும், பல பொருட்டுக்களால் வெளியிடாம விருப் பதையும் சிலராவது அறிந்திருப்பர். பாட்டின் பொருளும் இசையும் கருத்தும் நன்கு தெரிந்தால் உண்டாகும் உணர்ச் சிக்கும் மகிழ்ச்சிக்கும் எல்லையுண்டோ!

சிலப்பதிகார ஆசிரியர் சேர அரசர். அவர் நாட்டில் வழங்கிய மொழி தமிழ். மிகவும் அண்மையில் பிரிந்தது மலையாளம். இதற்குச் சான்று பழைய இலக்கியங்கள் (எழுத் தச்சன் காலத்திற்கு முன்) உள்ளன யாவும் தமிழ் மொழி ஒத்திருத்தலும், பின் வடமொழியோடு ஒத்திருத்தலும், P. சுந்தரம் பிள்ளை M. A., பாடிய,

'கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலை யாளமும்
உன்உதரத் துதித்தெழுந்து ஒன்றுபல வாயிடினும்'

எனக் கூறுவதாலும், பன்மொழிப் பேராசிரிய ராகிய பிஷப் கால்டுவெல் போன்றவர்களின் கருத்தாலும் உறுதிப்படும்.

இன்னும், வழக்கி லுள்ள,

தமிழ்	மலையாளம்
அத்தன்	அச்சன்
ஆச்சி	அச்சி
ஊண் கழிந்து	ஊண் கழிஞ்சு

என்பன போன்ற பல மொழிகளும் தமிழ் மொழியே என்று, கூறவும் வேண்டுமோ? ஐகார ஈருகத் தமிழில் உள்ள சொற்கள் மலையாளத்தில் அகர ஈருக வருகின்றன. இதனை மலையாளமும் தமிழ் மொழியும் அறிந்தோர் நன்குணர்வர்.

தமிழ்	மலையாளம்
யானை	யான
குதிரை	குதிர
ஓலை	ஓல
மாளிகை	மாளிக
கோட்டை	கோட்ட
பாறை	பாற
இரை	இர
பலகை	பலக

என வருவனவற்றைப் போலவே, கதை என்பது கத என்றும் கதையைக்கேட்டுக் களிக்கக்கூடிய காரணத்தால் களி என்றும் சேர்ந்து, கதை+களி என்பன கதகளி என்ருயிற்று என்று கூறலா மல்லவா! மேலும், இன்னிசைக் கதை மெய்ப்பாடு தோன்ற நடத்துவதே பழைய வழக்கம் என்றும், புதிய நாடகத்திற் கேற்றவாறு தற்காலம் மாற்றி அமைத்துள்ளார் கள் என்றும் தெரிகிறது. இக் கதை களி மெய்ப்பாடு தோன்ற ஒரு கதையைச் சொல்லும் அளவில் தமிழ் மொழியினின்று மலையாளம் எனத் தனி மொழியாகப் பிரிந்துவிட்டதால் கதை களி என்று மெய்ப்பாடுடன் தோன்றும் ஒரு வித நாடகத் திற்கு மூல காரணமாக இற்றைக்குத் தோற்றுகின்றது

என்பது மிகை யாகாது. தமிழ் மொழியிலுள்ள விருப்பால் எழுதுகிறார் என்ற எண்ணத்தை விட்டுவிட்டு, அந்த இரு மொழிகளையும் ஆராய்ந்தோர் தான் முடிவுக்கு வரக் கூடியதாக இருக்கிறது. இலக்கண விதியும், மெய்ப்பாடும், மெய்ப்பாட்டின் இலக்கணங்களும் தோன்ற உள்ளக் கருத்தை வெளியிட்டுக் கூறல் சங்க காலத்திலிருந்தே தமிழுக்குத் தனித் தன்மை என்பதை கலித்தொகை போன்ற இலக்கியங்களும், தொல்காப்பியம் என்ற இலக்கணமும் இன்றும் சான்று பகர்வனவா யுள்ளன.

ஆகையால், கதைகளி என்ற சொற்றொடரே மலையாளத்தில் கதகளி என்று வழங்குகிறது என்பதும், ஒரே கதையை மெய்ப்பாடு தோன்றப் பழைய முறையிலே தெருக் கூத்தைப் போல் நடிப்பதே ஆகும் என்பதும், புதிய நாடகத் திட்டப்படி மாற்றியது மிகவும் அண்மைக் காலம் என்பதும், மலையாளம் தமிழிலிருந்து பிரியு முன்* தமிழில் வழங்கியுள்ள முறையிலேயே வழங்கிவருகிறது என்பதும், இதைத் தான் இன்று கதகளி என்று பெருமிதங் கொண்டு நாடகத்தில் இல்லாத சிறந்ததன்மையை யுடையது என்று மகிழ்கிறார்கள் என்பதும், கவி வள்ளத்தோல் என்பவரால் நாடகத்திற்கு ஏற்றவாறு திருத்தப்பெற்றது என்பதும் குறித்த பொருள்களாகக் கொள்க. பொருந்துமா? சிந்திக்க.

---

* கி. பி. 17-ஆம் நூற்றாண்டு என்பர்.

திருக்குறள்
பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B. A. (Hons.), Ph. D.

(முற்றொடர்ச்சி: துணர் உரு, மலர் ரு, பக்கம் 136.)

கள்ளாமை.

8. *அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்*
கன்றிய காத லவர்.

(இ-ள்.) களவின்கண் கன்றிய காதலவர்—தவஞ்செய் வாருள் களவின்கண் தழும்பிய வேட்கையை யுடையவர்; அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார்—தம் ஆன்ம சிற்சத்தி யாகிய அளவின்கண் நின்று ஒழுகமாட்டார், ஆகலான் தவஞ்செய்வானுவான் கள்ளாமை காக்க தன்னெஞ்சு எ-று

ஏழனுருபு இரண்டிடத்தும் வினை செய்யிடம் பற்றி வந்தது. கன்றிய வென்னும் பெயரெச்சம் ஆறு சென்ற வியர் என்புழிப் போலக் காதல் என்னுஞ் செயப்படு பொருட் பெயர் கொண்டு முடிந்தது. காதலர் என்பது குறிப்புவினையாலணையும் பெயர். களவின்கட் கன்றிய காதல் என்பன தம்முள் ஒட்டி ஒரு சொல்லாய்த் தொக்கு அகரச்சாரியையொடு வகர இடை நிலையையும் அர் விகுதி யையும் பெற்றுக் 'களவின்கட் கன்றிய காதலவர்' என நின்றன.

'அருளாட்சி தலைப்படா தொழியினு மொழிக. யான் உலகத்துச் சிறுபான்மையராகிய பொருளுடை யாருள் என்மாட்டுப் பட்டாரை மயக்கி அவர் பொருளைக்கொண்டு பொருளின்றிக் கவலும் பல்லுயிர்க்கும் பகுத்துக் கொடுக் கின்றேன். இஃது அற்புச் செய்தி யாகலான் யான் அள வின்கண் நிற்கின்றவனே' என்றாற்கு, நினக்குக் களவின்

கண் தழும்பிய வேட்கை யிருக்கும் வரை அளவின்கண் நின்றொழுகல் ஏலாதென்பார் இக்குறளைத் தந்தா ரென்க.

ஆன்மாவானது சிவஞானங் கண்ணாகத் தன் சிற்சத்தி துணைகொண்டு சத்தாகிய சிவத்தைச் சார்ந்து அச்சிவத்தை யறியலுறின், அஃது சீவன்முத்தி நிலையைத் தலைப்படும், இந்நிலையில் மாணிக்கத்தைச் சார்ந்த படிகம் அம்மாணிக் கத்தின் ஒளி தன்கண் ஒரு பாகத்திற் பற்றி ஒரு பாகத்திற் பற்றாது நிற்பின், அப்பற்றாத பாகத்தானே பிறிதொன் றனைப் பற்றுமாறு போலச், சிவத்தைச் சார்ந்த ஆன்மா வானது சிவத்துவமாகிய எண்குணங்களுந் தன்பால் முழு வதும் விளங்காதவழி வேறொன்றனையு மறியும். இவ்வறி வானது கருவிதுணைகொண்டு அறியு மறிவாதல் பற்றிக் கட்டுக் கேதுவாகுமாகலான், தவஞ்செய்து சீவன் முத்தி நிலையை அடைந்தவன் சிவத்துவந் தன்பால் முழுவதும் விளங்குகின்ற பரமான்ம நிலையை யெய்தும் வண்ணம் பிர விருத்தி மார்க்கங்களை யறவே யொழித்து நிவிருத்தி மார்க்க மாகிய சிவோகம் பாவனை யென்னுஞ் சாதனத்தில் உறைத்து நின்று, சிவசத்தி யறிவிக்கக் கருவிகளின்றித் தன் ஆன்மசிற்சத்தி மாத்திரையானே சிவசத்தையே யறியும் வகை முயல்வன். பிறன்பொருளை விழைதலா லாங் கள்ளுதலாகிய பிரவிருத்தி மார்க்கத்தின் கண்ணே தழும்பிய வேட்கையை யுடையார்க்கு இந்நிலை ஏலாதாக லான், அன்னார் கருவிகளின்றித் தம் ஆன்மசிற்சத்தி மாத் திரையான் சிவசத்தையறியு மறிவைத் தலைப்படார் என்று கூறியவாறாயிற்று.

இக்குறளுக்குப் பரிமேலழகர் உயிர் முதலியவற்றை யளத்தலாகிய நெறியின்கணின்று அதற்கேற்ப ஒழுக மாட் டார், களவின் கண்ணே மிக்க வேட்கையை யுடையார் என்னு முரையைத் தந்தார். உயிர் முதலிய வற்றைக்காண் டல், கருதல், உரையெனும் வியஞ்சகங்களான் அளந்து அவ்வளவைகளுக் கேற்ப ஒழுகுவாரே தம் ஆன்மசிற்சத்தி மாத்திரையான் சிவசத்தை யறிவாரென்பது உண்மையே யாயினும், அளவின்கண் நின்றொழுக லாற்றார் என்பதற்கு அளவின்கண் நின்று ஒழுகமாட்டார் என்று பொருள் கூறு தலே முறையாகுமென்றும், இஃது ஆன்மசிற்சத்தியையே அளவென்று கொள்ளுஞ் சைவசித்தாந்தத்திற்கே உடன்

பாடு என்பதுங் கிடப்பவும், அவ்வாறு செய்யாது அளவின் கணின்று அதற்கேற்ப ஒழுகமாட்டார் என்று ஒரு சொற் றொடர் விரித்துப் பொருள் கொண்டு, வியஞ்சகங்களையே பிரமாணமென கொள்ளும் பிற மதங்களுக்கு ஏற்பப் பொருளுரைத்தமை வல்லுரையின்பாற் படுமென்க.

இப்பாட்டு என்னுதலிற்றோ எனின் தவஞ்செய்வானுவான் களவின்கண்ணே தழும்பிய வேட்கையை யுடையனுயின், அவனுக்குப் பரமான்ம நிலை தலைப்படாது; அந்நிலை வேண்டின், அவன் களவின்கண்ணே பயிலாது கள்ளாமை முதலியன துணைகொண்டு தவஞ்செய்க. (எ-து.)

9. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்.

(இ-ள்.) களவு என்னும் காரறிவாண்மை—களவு என்று சொல்லப்படுகின்ற திரிவுணர் வுடைமை; அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல்—பிரமாணம் என்று சொல்லப்படுகின்ற தஞ்சிற்சத்தியைத் தலைப்பட்டார் மாட்டு இல்லை, ஆகலான் தவஞ்செய்வானுவான் கள்ளாமை காக்க தன்னெஞ்சு. (எ-து.)

கார் உவமையாகுபெயர்; அஃது ஈண்டு அஞ்ஞான மென்னுந் திரிவுணர்வைக் குறித்து நின்றது. ஆண்மை உடைமை. கார், அறிவு என்பன திரிவாகிய உணர்வு என்னும் பொருளில் தம்முன் ஒட்டி ஒரு சொல்லாய்த் தொக்கு இருபெயரொட்டுப் பண்புத் தொகையாய் நின்று அதன் பின்னர்த் திரிவுணர்வாகிய உடைமை யென்னும் பொருளில் ஆண்மை யென்னுஞ் சொல்லுடன் றொக்குக் காரறிவாண்மையென இருபெயரொட்டுப்பண்புத்தொகை யாய் நின்றன. அளவு பிரமாணம். ஆற்றல் ஆன்மசிற்சத்தி யாகிய ஞானம். புரிதல் தலைப்படுதல். அஃது இப் பொருட் டாதலை 'இருள்சேரிருவினையுஞ் சேரா விறைவன், பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு' என்பதனுனு மறிக. புரிந்தார் வினையாலணையும் பெயர். இல் என்பது இல்லையென்னுங் குறிப்பு வினைமுற்றின் விகாரம். காரறிவாண்மை, ஆற்றல் என்னுங் குணப்பண்புகள் இரண்டும் ஒன்றனுக்கொன்று

மறுதலையென்பது ஆகம வளவையாற்றுணியப் படுமாக லான், இதனையடிக்கொண்டு,அப்பண்புகளைப் பற்றியெழுங் களவு, அளவு என்னுந் தொழிற் பண்புகளும் ஒருங்கு நில்லா வென்பது சாதிப்பார், அத்தொழிற் பண்புகளை அத னதன் குணப்பண்புகளின் மேல் வைத்துக் கூறினர்.

'இவ்வுலகத்துப் பொருளுடையார் சிலரேயாக, அவருள் தம்மாட்டுப் பட்டாரை வஞ்சித்து அவர் பொருளைக்கொண்டு பொருளின்றித் தயங்கும் பல்லுயிர்க் கும் பகுத்துக்கொடுக்கும் அற்புச்செய்தி யுடையார் அள வின்கண் நின்றொழுக மாட்டார் என்றீர், நீர் கூறுவதற்குப் பிரமாணம் உண்டோ' என்றாற்கு அஃதுண்டென்று காட்டு வார் இக்குறளைத் தந்தாரென்க.

தவஞ்செய்வார்க்குப் பிறன் பொருளை உள்ளுதலாங் களவு ஆணவமலச் செய்தியாகிய அஞ்ஞானம் என்னுந் திரிவுணர்வை மூலமாக வுள்ளதென்றும், கருவிகளின்றித் தம் ஆன்மசிற்சத்தி மாத்திரையான் சிவசத்தை யறியலுறு மறிவாகிய பிரமாணம் மலசத்தி ஏக்கத்தின்கண் தலைப் படும் ஞானத்தை அடிக்கொண்டே நிகழுமென்றும் ஆக மங்கள் கூறுவதை யுடம்பட்டு, ஆணவமலச்செய்தியாகிய அஞ்ஞானமும் அம்மலநீக்கத்தின்கண் விளங்கும் ஞானமும் ஒன்றனுக்கொன்று மறுதலையாதல் பற்றி, ஒன்றைத் தலைப் பட்டார்க்கு மற்றையது விளங்காது என்னும் நியாயத் தானே, அக்குணங்களைப் பற்றியெழும் களவுமளவுமாகிய தொழிற்பண்புகளும் ஒருங்கு நில்லா வென்று சாதித்தா ராயிற்று.

இக்குறளுக்குப் பரிமேலழகர் 'களவென்று சொல்லப் படுகின்ற இருண்ட வறிவினை யுடையராதல் உயிர் முதலிய வற்றை அளத்தலென்னும் பெருமையை விரும்பினர் கணில்லை' என்னும் உரையையும் 'இருள்மயக்கம். காரியத் தைக் காரணமாக வுபசரித்துக் களவென்னுங் காரறி வாண்மை யென்றுங், காரணத்தைக் காரியமாக்கி அள வென்னு மாற்றலென்னுங் கூறினர். களவுந்துறவும் இருளு மொளியும் போலத் தம்முள் மாறுகலின், ஒருங்கு நில்லா வென்பது இவை மூன்று பாட்டாலுங் கூறப்பட்டது' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

ஆற்றல் என்பதற்குச் சத்தியென்னுங் குணப் பண்பென்னும் பொருளே செம்பொருளாகக் கிடப்பவும், அதனைக்கொள்ளாது, அது காரியப்பாடடைந்து தொழிற் பண்பாகி ஆகுபெயராய் நின்று, அதன் பின்னர் அத் தொழிற் பண்பின் காரியமாகிய பெருமையைக் குறிக்கும் வழி இருமடியாகுபெயராய் நிற்க, இதனைக்கொண்டே அழகியாராவார் இக் குறளுக்குப் பொருள் கண்டது செம் பொருள் பொருந்தாதென்னும் நியாயத்தாலாய தெனல் வேண்டும். செம்பொருள் பொருந்து மென்பது மேலே காட்டப்பட்டது. அது சைவ சிந்தாந்தக் கருத்தாதல் அறிக. இதனானே ஈண்டு அழகியாராவார் ஆசிரியர் கருத்தை வியஞ்சகங்களையே பிரமாணமாக நுதலும் பிறமதச் சார்பினின்று திரியக்கண்டாரென்க. இனிப் புரிதல் என்பதற்கு விரும்புதல் என்னும் பொருள் கொண்டு களவாவது 'உயிர் முதலியவற்றை அளத்தலென்னும் பெருமையை விரும்பினர்கணில்லை' என்று கூறினரெனின், அஃது உரையன்மை யறிக. களவையும், உயிர் முதலியவற்றை அளத்தலென்னும் பெருமையையும் விரும்புதல் இவ்வுலகில் பலர் மாட்டும் உளதாகலான். அன்றிக் 'களவாவது உயிர் முதலியவற்றை அளத்தலென்னும் பெருமையைச் செவ்விதாக விரும்பினர் கணில்லை' என்ற கருத்தையே கொண்டாரெனின் அஃதும் நல்லுரையன்றென்க. அளத்தலைச் செவ்விதாக விரும்பினர் மாட்டும் பிராரத்த வினை நுகர்ச்சிக்கண் சென்ற தற்போதம் மேம்படுதற்கண் களவுச் சிந்தையானது பழக்கத்தான் ஒரோவொருகாற் றலை காட்டுமாகலான்.

இப்பாட்டு என்நுதலிற்றோ வெனின்; கருவிகளின்றித் தம் சிற்சத்தி மாத்திரையான் சிவசத்தை யறியு மறிவிற்குக் கள்ளுதல் மாறுகு மாகலான், தவஞ்செய்வானுவான் களவினை யொழிவானுக. (எ-து.)

10. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

(இ-ள்.) அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம்போல— கள்ளாமை முதலாயின துணைகொண்டு தவஞ்செய்து தம் ஆன்ம சிற்சத்தியாகிய அளவினைப் பயின்றார் நெஞ்சத்தின்

கண்ணே ஏக சாதனமாகிய அறம் நிலை பெற்றாற்போல; களவு அறிந்தார் நெஞ்சில் கரவு நிற்கும்—களவினைப் பயின்றார் நெஞ்சத்தின் கண்ணே வஞ்சனை நிலைபெறும், ஆகலான் தவஞ்செய்வானுவான் கள்ளாமை காக்க தன்னெஞ்சு. (எ-று.)

அறிந்தார் என்பது இரண்டிடத்தும் வினையாலணையும் பெயர். அளவறிந்தார், களவறிந்தார் என்னும் இரண்டாம் வேற்றுமைத் தொகைகள் நெஞ்சு என்பதனோடு தொக்கு அளவறிந்தார் நெஞ்சு, களவறிந்தார் நெஞ்சு என்னும் ஆறாம் வேற்றுமைத் தொகைகளாய் நின்றன. நெஞ்சத்து என்புழி அத்துச் சாரியை விரிந்து கண்ணெனுருபு தொக்கு நின்றது. போல உவமச்சொல். நிற்கும் என்பது நிலை பெறும் என்னும் பொருட்டு. நெஞ்சில் என்புழி ஐந்தனுருபு ஏழாவதன் பொருட்கண் வந்தது. உவமை எடுத்துக் காட்டுவமை.

'களவென்னும் அஞ்ஞானச் செய்தியானது பிரமாண மென்னும் ஆன்ம சிற்சத்தி மாத்திரையான் நிற்றலைத் தலைப்பட்டார் மாட்டு இல்லையென்று உரையளவை சார் பாகக் கருதலளவையாற் சாதித்தீர். அஃதொக்கும். யான் களவுச்சிந்தையை நீக்க விழைகின்றேன். அஃதெவ்வாறாகும்?' என்றாற்கு 'யாண்டுக்களவு ஆண்டு வஞ்சனை, அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல' என்று கூறுமுகத்தானே 'யாண்டு வஞ்சனையின்று ஆண்டுக் களவின்று' என்னும் அவிநாபாவத்தைப் பெறவைத்து, வஞ்சனையைக் கடியு முபாயத்தானே களவை யொழிக என்று குறிப் பெச்சத்தாற் கொள்ளுமாறு செய்வார் இக்குறளைத் தந்தாரென்க.

சத்து மசத்துமாகிய இருவகைப் பிரபஞ்சத்தையுங் கருவிகள் துணைகொண்டு அறியுமறிவெல்லாம் இடையே விளங்கி மறைவதாகிய பொய்யெனக் கொண்டு, சிவசத்தி அதிட்டிக்க ஒருவகை உபாதியு மின்றிய தஞ் சிற்சத்தி மாத்திரையான் சிவசத்தை யறியு மறிவே என்னும் நிலை பெற்றுள்ளதாகிய மெய்யென உணர்ந்து, கள்ளாமை முதலாயின துணைகொண்ட ஏகசாதனஞ்செய்து, தஞ்சிற் சத்தி மாத்திரையான் நிற்றலைத் தலைப்பட்டு அதன்கண்

பயின்று நின்ருர் மாட்டு ஏகசாதனமாகிய அறம் நிலைபெறு மென்பது ஆகமநூற்றுணிபு. இத்துணிபை உடம்பட்டு, யாண்டுக்களவு ஆண்டு வஞ்சனையென்னும் அவிநாபாவ மாகிய பொருள் புலப்பாடு சாதிப்பார், ஏக சாதனமானது தஞ்சிற்சத்தி மாத்திரையான் நிற்றலைப் பயின்ருர் மாட்டு நிலை பெற்ருற்போல, வஞ்சனையானது களவைப் பயின்ருர் மாட்டு நிலைபெறுமென எடுத்துக் காட்டுவமை பற்றிக் கூறினுராயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'அவ்வளத்தலையே பயின்றவர் நெஞ்சத்து அறம் நிலை பெற்ருற்போல நிலை பெறுங் களவினைப் பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனை' என்னும் உரையைக் கூறி 'உயிர் முதலியவற்றை அளந் தறிந்தார்க்குத் துற வறஞ்சலியாது நிற்குமென்பது இவ் வுவமையாற் பெற்ரும். களவொடு மாறின்றி நிற்பது இதனுற் கூறப்பட்டது' என்னும் உரை விளக்கத்தைத் தந்துழி, உவமானத்திலும் பொருளிலுங் கிடக்கும் அவிநா பாவங்கள் இரண்டையும் அறியாதானுக்கு அவற்றை அறிவிக்குமாறு ஆசிரியர் இப்பாட்டைத் தந்தாரென்று கருதினுராயின், அற்றன்றென்க. ஆவையாவது ஆமாவை யாவது கண்டறியாதானுக்கு ஆபோலும் ஆமா என் றக்கால், அஃது பொருள்படாதாகும். ஆவை முன்னறிந் தானுவானே ஆமாவைக் கண்டு ஆபோலும் என்னும் உவமைபற்றி ஆமா இது என்றறிவன். ஈண்டு ஆபோலும் என்னும் உவமையாற் பெற்ற அறிவே அவனுக்கு ஆமா இது வென்று எடுத்துக்காட்டி நிற்கின்றமையான் ஆ போலும் ஆமா வென்பதன்கண் கிடந்தது அணிநூலார் கொள்ளும் எடுத்துக் காட்டுவமை யாகும். இதனையே மீமாஞ்சை நூலார் உவமான அளவை யென்பர். இதனை யறியாதாராகிய மாறனலங்கார வுரைகாரரும், இலக்கண விளக்க வுரைகாரரும், பிறரும், இதனைக் குறையுவமை யென்றும், மறு பொருளுவமை யென்றும், திருட்டாந்த மென்றுங் கூறி மயங்குவர். இனி, ஆவையும் ஆமா வையுங் கண்டறியாதானுக்கு ஆபோலும் ஆமா வென்பது பொருள் படாதவாறு போல, அளவொடு அறத்திற்கும், களவொடு கரவிற்கும் உளவாய அவிநாபாவங்களை அறியா தானுக்கு அதுபோல இதுவென்பது பொருள்படாதாகும். அன்றி, உவமானத்திலுள்ள அவிநாபாவத்தை ஆகம நூற்

றுணிபு பற்றி அறிந்தானுவானுக்கே அது போல இது வென்பது பொருளினுள்ள களவொடு கரவிற் குளதாய அவிநாபாவப் புலப்பாட்டைத் தரும். இவ்வொரு புலப் பாட்டையே தருதல் ஆசிரியர்க்குக் கருத்தாகு மாகலான் 'உயிர் முதலியவற்றை அளந்தறிந்தார்க்குத் துறவறஞ் சலியாது நிற்குமென்பது இவ்வுவமையாற் பெற்ரும்' என் னும் 'களவொடு மாறின்றி நிற்பது இதனுற் கூறப் பட்டது' என்றும் அழகியார் கூறியன போலியாய வாறு காண்க.

இனி 'அளவறிந்தார் நெஞ்சத்தறம் போல' என்ப தற்கு 'அவ்வளத்தலேயே பயின்றவர் நெஞ்சத்து அறம் நிலை பெற்ருற் போல' என உரைகூறுதற்கண்,' அளவென்ப தன் பின் ஓரேகாரம் பிரிநிலைப் பொருளிலாதல் தேற்றப் பொருளிலாதல் தொக்கதாகக் கூறினுராயிற்று. அஃது பிரிநிலைப் பொருள தெனின், 'உயிர் முதலியன வற்றைக் காண்டல், கருதல் முதலியன பற்றி அளத்தலே மாத்திரம் பயின்றவர் நெஞ்சத்து விரதங்களும் அவற்ரு னுதிப்ப தாகிய ஞானமுமாகிய துறவறஞ் சலியாது நிற்பது போல்' என்பதே அழகியார் கொண்ட உவமையாகும். ஈண்டு இவ் வுவமையிற் கூறப்பட்டாராவர் உயிர் முதலியன வற்றை அளத்தலே மாத்திரம் பயின்ருர் எனவே, அவர் விரதங்களைப் பயின்ருரல்ல ரென்றும், அதனுனே அவ்விர தங்களைப் பற்றி உதிக்கும் ஞான மின்றியவர் என்றுங் கொள்ளக் கிடக்கின்றமையான், அவர் மாட்டு விரதங் களும் அவற்ரு னுதிப்பதாகிய ஞானமுமாகிய துறவறஞ் சலியாது நிற்கு மென்பது பெறப்படாதாக, உவமை பொருட்கேடு அன்றி, அவ்வேகாரந் தேற்றப் பொருள தெனின், காண்டல் கருதல் முதலியன ஆணவமலச் செய்தி பற்றித் தோன்றுஞ் சுட்டறிவின்பாற் படுமாகலான் அவற்றைப் பயின்ருர் என்பதில் ஐயங் கொள்ள இடங் கொடாது நின்ருர் மாட்டும், துறவறமென்று அழகியார் கொள்ளும் விரதங்களும் ஞானமுமாகிய இவற்றைச் சொல் லுங் கள்ளல், கொலை முதலிய சுட்டறிவுச் செய்திகள் இடையிடையே தோன்ற, அத்துறவறஞ் சலிக்கு மென்பது பெறப்படு மாகலான், துறவறம் அவர் மாட்டுச் சலியாது நிற்கு மென்னும் உரையும் போலியாய வாறு காண்க.

தொல்காப்பியர்.

வேலூர்க் காரழகன்.

தொன்மைத் தூய்மையும், அறிவியலின் நுண்மையும், இயற்கையி னினிமையும் ஒருங்கே திரண்ட கலைப் பிழம்பே தொல்காப்பியர். கால அளவிற் கப்பாற்பட்டுத் தொன்மைக் குத் தலையாய், யாவு மறிந்தவர்கட்குப் பேரரசாய், இனிமை யும், நயமும், பொலிவும், சிறப்பும், உயர்வும், எழிலும், அளவையும், தூய்மையும் என்றும் நின்றிலங்க வல்லதாய், என்றும் எதற்கும் உவமை யற்றதாய், பிழை யற்றுப் பொலி வுடன் இறை யியலை உலக வியலை உயி ரியலை, வாழ் வியலை

இனிக் களவொடு வஞ்சனைக் குளதாய அவிநா பாவத்தை யுணர்த்துதலே ஆசிரியர் கருதி நின்ற ரென்ப தனை யறிந்தார் போன்று, அழகியார் தம் முரையில் 'கள வினைப் பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனை நிலை பெறும்' என்று கூறினுரேனும், உரை விளக்கத்தில் ஓரிடத்து அது சலியாது நிற்கு மென்று கூறிவிட்டுப் பின் 'களவொடு மாறின்றி நிற்பது இதனுற் கூறப்பட்டது' என்று கூறியமை குன்றக் கூறலாகு மொழிய அவிநா பாவங் கூறக் கருதிய ஆசிரியரது கருத்தாகா தென்க. களவைப் பயின் ருர் மாட்டு வஞ்சனை சலியாது நிற்றல் என்பது அது தான் கெடாது நிற்றல் என்றும், அது மாறின்றி நிற்றல் என்பது அது களவைக் கொல்லாது நிற்றல் என்றும் பொருள் படுதல் காண்க. களவொடு வஞ்சனைக்கு அவிநா பாவம் உண்டென்பது வஞ்சனையானது தானுஞ் சலியாது, கள வொடு மாறு மின்றி நீக்கமு மின்றி உடனுய் நிற்கு மென்னும் பொருளதாதல் அறிக.

இப் பாட்டு என்னுதலிற்றோவெனின் :-தவஞ்செய்வா னுவான் வஞ்சனையைக் கடியு முபாயத்தானே களவினைத் தவிர்ந்து கள்ளாமைச் சிந்தையொடு நிற்க. (எ-து.)

(தொடரும்)

விளம்பிப், பிணக்கிற் கிட னின்றி, இயற்கைக்கும் நடை முறைக்கும் ஏற்றதாய்த் துலங்குவது, தொல்காப்பியரின் தொல்காப்பியமே.

மன்பதையி னுளத் துதிக்கும் அருவமா மெண்ணம் ஒலியா லொளிர்கையில் உடல் வளர்ச்சிக்கு ஊன மின்றி மிகமிக மெல்லொலியால் அமைத்து, அதற் கேற்ற அழகிய முறையில் வரி வமைத்து, அவ்வெழுத்துக்களி னமைப்பைக் கொண்டே, வையக வமைப்பையும் உணர்த்திய உயர் வுடைமை தொல்காப்பியருக்கே உண்டு. உயிர் வேறு என்றும், மெய் வேறு என்றும், மெய்யில் உயிர் புகுகிற தென்றும், உயிரால் இயக்க முண் டென்றும், மெய்யின் வழியே உயிர் தோன்று மென்றும் வரையறுத்து மயக்க மற்ற முறையிலே கட்டிய முடிவு, மன்பதை மண்ணகத்தில் வாழ வழிகோலிற்று. எழுத் தமைப்பின் நுண்மை யொளி யால் ஏனையோரையும் ஏம முற வைத்து, உயிரைப்பற்றிய ஆராய்ச்சி யிருளில் மூழ்கி மாய்ந்து வருபவர்கட்கு எளிய முறையில் விளக்கந் தந்து, நல்லொளி ஏந்தி நிற்பது தொல் காப்பியர் தொல்காப்பியமே.

சொல்லைப் பற்றிச் சொல்ல வந்த ஞான்று, உயரிய ஒழுக்கமே மக்கட் பண் பென்று பகர்ந்து, மக்களா யிலங்கியும் பண் புடைமை பிறங்க வில்லை யெனின் தாழ்ந்த இழுக்குடன் எண்ணுதற் குரியவ ரென உரைத்து, உருவத்திற்கு உயர் வளிக்காது, பண்புக்குப் பீடளிக்கும் சிறப்பு ஒளிர்கிறது.

சொல்லானது பொருளை விளக்குதற்கு விளக் கென விளங்குதல் இயல்பாதலின், உளத்தே களிப்பால் கிளம்பும் உயரிய காத லுணர்ச்சியின் செம்பொருளாம் அகத் திணைக்கே, முதன்மை யளிக்கப்பட்டுளது. பொரு ளியலை அகம் புறமென இரண்டினு ளடக்கி, இன்பமும், பொருளும், அறனும், வாழ்வின் இறுதி யென வரை யறுத்து முடிந்த முடிபு கட்டி, இவை யனைத்தையும் அழியா அழ கொளியாம் உவமை யற்ற கவி யொளியால் எழில் பெறத் திகழ வைக்கையில், தொன்மைத் தூய்மை யும், சிறந்த செய்யுள் ஒலியும், புலமையின் பொலிவும், வாய்மையின் வளமும், இயற்கையின் இனிமையும் இனிதே

இலங்கல் கண்கூடு. கலைகளுக்கு உறைவிடமாய கன்னித் தமிழகம் இயற்கை எதிர்ப்பிற்கும் புற நாகரிகப் படையெடுப்பிற்கும் இடையே இன்னலுற்ற ஞான்று, தொல்காப்பியர் தமிழருடைய விழுமிய நாகரிகத்தை அலை மலிந்த கடலில் மூழ்கி முகந் தெடுக்கும் முத்துச் சிப்பி போல் தேடித்தந்தார்.

இவர் யாத்த தொல்காப்பியத்தில் இனிமையும், சிறப்பும், தெளிவும், தகவும் நிரம்பிய கலையின் பேரொளி இணையற்ற உயரிய நடையில் மிளிர்கிறது. இனிமையை இயம்பி இன்புற வைத்து, நலத்தை நவின்று நலமுற வைத்து, அறத்தையும் அறிவியலையும் அறைந்து, சிந்தனை வித்தை அனைவருடைய உளத்திலும் விதைத்து, ஆராய்ச்சி நீர் பாய்ச்சி, விளக்க முறுதற்கு வழி கோலி உயர் வெய்துதற்கு அழைத்தேகல் வெள்ளிடைமலை. இலக்கிய ஆற்றலும் புலமையும் ஒருங்கே ஒருவரிடத் திருத்தல் அரி தெனினும், இவர்பால் இரண்டும் ஒருங்கே இருத்தல் தனிச் சிறப்பன்றோ! அருவமாகிய கூரிய நுண்ணறி வியலை நுண்மாண் நுழை புலமையால் அறிந்து, யாவரு மறிய விளக்குகின்றார். இவர்தம் மணிமொழிகள் ஓர்ப்பிற்கு உறைவிடமாகிய அறிவிற்கும், உணர்வுக்கு உறைவிடமாகிய உளத்திற்கும் விருந்தன்றோ?

பேரறிவின் விளக்கமும், பொருள் பிறங்குதற்கு முன்னர் அதன் அருவமாம் கருத்தை யறிவிப்பதும் நூலன்றோ! கண்ணுடியில் பொருள் தெரிவதைப் போன்றே, வையக வியலையே துளக்க மற விளக்குவது தொல்காப்பியமே, கலைஞனின் உற்பத்தியிற் றோன்றும் பொரு ளியலின் கூறுகளைப் போன்றே, நிறை யறிவுடைய புலவனின் பனுவலில் காணலாம். இறை யியல், உலகியல், உயிரியல், காதலியல், அளவியல், இன்ன பிறவற்றுடன் உவமை யற்று உலகில் உலவி, வையகக் கலைக் கருவூலத்தின் காட்சிமன்றம் என மாண்புடன் மிளிர்வது தொல்காப்பிய மன்றி வேறென்ன?

காலத்தைக் கருதுமிடத்துப், பைந்தமிழன் பேருவகை எய்தாமல் இரான். ஈரைந்து பொன்மொழிகளை இயம்பிய இயேசுவும், பொன்னுரை பகர்ந்த புத்தனும், அறிவியலை யறைந்த அரிஸ்டாட்டலும், வடவாரிய வால்மீகியும்,

பிறத்தற்குப் பன்னெடுங் காலம் முன்னரே, குமரியாறு குலேவுறுது ஓடிக்கொண்டிருந்த ஞான்று கன்னித்தமிழரின் கனிவுறும் நாகரிகத்தை ஒல்காப்புகழுடை தொல்காப்பியர் ஒளிரவைத்தார்.

திண்மையினின்று நுண்மையை நவின்ற நற்சிறப்பை எண்ணுங்கால், ஏமம் உறுமலிருக்க இயலவில்லே. நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி இவ் வைந்தின் கலவையே உலகமென்று உரைத்து, இயல்பாகவே வினேயிலே பற்ருத அறிவுப் பிழம்பே இறைவனென் றியம்பி, கடல் சூழ்ந்த உலகிடை உலவும் உயிரினங்களே அறிவின் பெருக்கத்தால் அறு வகையென அறையுங்கால், நுண்மையாம் அறிவிற் கும் திண்மையாம் புலனுக்கும் பொருத்தம் கண்டு கூறிய தைக் கருதுங்கால், தொல்காப்பியருடைய அறிவியலின் அளப்பரு மாட்சி விளங்குகின்ற தல்லவா?

உலகம் உவகையுறும் இன்ப மலர்ச் சோலே யென உணர்த்தி, வாழ்விற்கு இன்பமே இறுதி என் றறுதியிட்டு, அவ் வின்பம் ஆணுக்குப் பெண்ணிடத்தும், பெண்ணுக்கு ஆணிடத்தும் உண்டென்றும், அவை எழு வகை என்று கூறுங்கால், பொருந்தாக் காதலிரண்டையும், பொருந்துங் காதல் ஐந்தையும் கூறுகிருர். காதலே இன்ப மாதலின், அக் காதலே தலேயாய தென்று, தகவு தந்தார் தொல் காப்பியர். இயற்கையிற் ருேய்ந் தியற்கையின் கூறுகளேக் கூர்ந்தறிந் தமையால், உயர்வுடைக் கருத்துக்களேப் பெற்று, இயற்கையாகவே பெற்ற பேரறிவால் மக்க ளுளத்திற் றுள்ளும் உணர்ச்சிகளுக்கு எல்லே கண்டு, ஆணும் பெண்ணும் மகிழ் வுறுதற்கு இயற்கையே இன்ப மாளிகை யென இயம்பி, குறிஞ்சி, முல்லே, மருதம், நெய்தல், பாலே என ஐவகையாகப் பிரித்து, முறையே, அவ் விடத்திற் குரிய புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்ற ஒழுக்கங்களே விளம்பியமை

உயர்வன்றே? அஃதோடமையாது, மண்ணகத்து மக்கள் களிப்புற்று வாழத் தெய்வமும், நிலத்தைப் பயிராக்க விலங்கும், பாடிப் பொலிவுற வைக்கும் பறவைகளும், மலர் நல்கிக் கனி கொடுக்கும் மரங்களும், உழைத்துப் பொருளீட்டத் தொழிலும், நல்லுணர்ச்சி பெற்றுக் களிப்பிற் றிளைக்கப் பறையும், யாழும் இன்றியமையாதன என்று கூறியதை நோக்குங்கால், மகிழ்வுறுதற்கு மண்ணக மன்றிப் பிறிதொன் றில்லை யென்றே கருத வேண்டு மன்றே! இத்துணைச் சிறப்புடைய உலகில் ஆணும் பெண் ணும் பெறற் கரும் பெரும் பொருளாம் தகவுடைத் திருமணம் புரிந்து, செயிர் தீர் கற்பு நெறி நின்று, கனிவுறும் காதல் அற வாழ்வு வாழ்ந்து, இன்பத்திற் றிளைத்தலே அற வாழ் வாதலின், பெண்ணியலைப் பகரவந்த தொல் காப்பியர், புற உறுப்பினை யுரைக்காது, பீடுடைப் பண்பைக் கூறுங்கால், 'செறிவும், நிறைவும், செம்மையும், செப்பும்—அறிவும், அருமையும் பெண்பாலான' என்று கூறியதை நோக்குமிடத்து, உவமை யற்ற உயர்வு ஒண் ணுடியர்க் கன்றி வேறெவர்க் குளது? இவ் வுயர்வுடைப் பெண்டிர் தகவுடைய தலைவனுடன் வாழுங்கால், தலைவன் இறந்துபடின், தனி வாழ்வு அறங் கடைநின்ற வாழ்வெனத் தேர்ந்து, நனியழல் புகுந்து, இன் னுயி ரிழப்பதில் கழிபேரு வகை யெய்துவர் என் றுரைத்தமை தொன்மைத் தமிழ்ப் பெண்டிரது பெருந்தகைமையை விளக்குகிற தன்றே!

ஆடவரோ, கல்வி, தறுகண், புகழ், வள்ளன்மை, இன்ன பிற உயரிய பண்புகள் பெற்றுத், தூய நெறி நின் றொழுகல் வேண்டுமென உரைத்ததுடன், கற்பும், அன்பும், நல்லொழுக்கமும், பொறுமையும், அடக்கமும், விருந்தளித் தலும், சுற்ற மோம்பலும் மகளிர்க் குரியன வென்று கூறி யமை கூர்ந்துநோக்கற் குரியது. சிறப்பியல்களைச் செவ் வனே செப்பிய தொல்காப்பியர், பொது இயல்புகளையும் பகராமலில்லை. இவ ரியம்பிய பொது வியல்கள் ஏனையோ ரும் ஏற்றுக்கொள்ளும் சிறப் பெய்தியதோ டல்லாமல்,

பாராட்டிப் புகழும் பெருந்தகைமையும் பெற்றன வன்றே! பழுநிய அறிவு பெற்ற பண்டைப் பெரியோர்களின் பொன் னுரைவழி நின்று, ஒழுக்கம், கல்வி, குடிப்பிறப்பு, வாய்மை, தூய்மை, நடுவுநிலை, அவாவின்மை, அழுக்காறுமை என்ற சால்புகள் பெற்று, ஐம்புல னடக்கி, சோர் வின்றி வழங்கி, நிறைபுகழ் பெற்று, தீங் கிழைத்தோரைப் போற்றும் பெருந்தகைமையும், மெய்ப்பொரு ளுணர்தலும், ஏனைய உயிர்கள் மீது அருள்சொரிந்து துறவு பூணுதலும், கடத் தற் கரிய காமத்தைக் கடத்தலுமே மன்பதைக்கு மாண்பு நல்கும் பீடுடை யியல்புக ளென்று உரைத்த உயர்வுடை மையே தொல்காப்பியரின் பண்புடைமைப் பிழம்பின் பேரொளி யன்றே!

நல்லுலகில் நாயகனும், நாயகியும் இன்ப மலர் வன மாம் இல்லறச் சோலையில் இனிதே நுழைந்து கற்புறு காத லறவாழ்விற் றிகழ்ந்து, இன்பப் பேறும் நன்மக்களை ஈன்று, சுற்றமோம்பி, அருள் வெள்ளத்தால் ஆண்டவனுட னென்றி, உவமை யற்ற உவகையில் கழிபே ருவகை யெய் தலே சாலச் சிறந்த தென்று செப்பிச், செந்தமிழரைச் செம்மையாக்கும் செவ் வொளியை ஏந்தியவர் தொல் காப்பிய ரன்றே!

புரை தீர்ந்த புலமையும், கனிவுறும் கவிநயமும், யாப் பியலின் இனிமையும், அளவையி னழகும், வாய்மையி னுயர்வும், தொன்மையின் தூய்மையும், தனித்தமிழின் தகவும், அறிவியலின் எழிலும் ஒருங்கே இலங்கல் தொல் காப்பியரிடத் தன்றே!

வாழ்க தொல்காப்பியர்!

ஆங்காங்கே!

கோ. தியாகராசன், G. M. V. C. தஞ்சை.

அலகு

'உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்திவ ணங்குவாம்'

பெரியபுராணத்தில் கடவுள் வணக்கமாகச் சேக்கிழார் பாடிய இப்பாட்டின் மூன்றும் அடியின் முதற் சொல்லான "அலகில்" என்பதற்கு 'அளவில்லாத' எனப் பொருள் படுத்துவதை நான் அறிவேன். இப்பொருள் நேரிதன்று என்பதே என் துணிபு.

ஞாயிற்றையும், மின்சார விளக்குகளையும் பார்க்கும் பொழுது, அவற்றிலிருந்து நுண்ணிய ஒளிக் கம்பிகள் (Rays) நம் கண்களில் தாக்குவதை நாம் அறிவோம். இக் கம்பிக்கே 'அலகு' (Rays) என்றுபெயர்.

மேற் கூறிய கம்பிகள் ஞாயிற்றினிடத்தும், மின்சார விளக்குகளிடத்தும் ஒரு கட்டாகக் கிளம்பி, பின் தனித்தனிக் கம்பிகளாக விரிந்துவருவதுபோல் தோன்றும். இதுபோல் அடியில் கட்டுண்டு பின் தனித்தனியாகப் பிரிந்த உருவமுள்ள துடைப்பத்திற்கும் 'அலகு' எனப் பெயர் வந்தது.

ஒரு காலத்தில் கிரேக்கர்கள் (Greeks) தம்மை வருத்திய 'பெரியம்மை' எனனும் தொத்து நோய், தங்கள் பெண் தெய்வம் சினந்து தங்களை நோக்கியதால் அவள் கண்களிலிருந்து தோன்றிய அலகுகள் தங்களைக் குத்தி நோய் உண்டாக்கியதாகக் கருதினார்கள். இதுபோலவே நம் மக்கள் இந்த நாள்களிலும் மாரியம்மனின் சின நோக்கால் அம்மைகள் உண்டாவதாக நினைக்கிறார்கள். இந்த அம்மைகளின் நடுவில் சிறு குழியும், அதைச் சுற்றி வீக்கமும் உள்ளன. ஆகையால், கவிழ்த்த கொட்டாங்கச்சி போல் மாவினால் செய்து, அதன் உச்சியில் ஒரு குழி செய்து, அக் குழியில் நெய் ஊற்றித், திரி போட்டு விளக்

கேற்றுகிறார்கள். மாவினால் விளக்கு செய்வதே கருத்தானால், மாவை அகல் போன்று செய்து அதில் விளக்கேற்றலாம். கொட்டாங்கச்சி போன்ற வடிவு வேண்டியதில்லை.

மேலும். நம் மக்கள் நோய் உற்றபொழுது தெய்வங்களின் சின நோக்கால் உண்டானது என நினைத்தும், அச் சினக் கண்களிலிருந்து வரும் அலகுகள் தங்களைத் தாக்கின வென நினைத்தும், அக் கம்பிகள் போல் வெண்மைக் கம்பிகள் செய்து தங்கள் உடலில் குத்திக்கொள்ளுகிறார்கள். இக் கம்பிகளின் பெயர் 'அலகு.'

எனவே, மேற்காட்டிய பாட்டி லுள்ள 'அலகு' என்னும் சொல்லிற்கு (Rays) கம்பி என்பதாகப் பொருள் படுத்துவதே தக்கது.

கதிரவனுக்கும், விளக்குகளுக்கும் அலகுகள் உண்டு. இறைவனின் சோதிக்கு அலகுகள் இல்லை.

அலகுகள் இல்லாத சோதியை உடையவன் அம்பலத்தாடும் இறைவன்.

இலக்கணம்

மெய் எழுத்தை 'ஒற்று' எனச் சொல்லுகிறோம். ஏன்? உயிரெழுத்துக்களின் உச்சரிப்புகள், உள் காற்று தடைபடாது ஒலிக்கும் திறந்த ஒலிகள் (open sonrorous sounds) எனவே அரேபியர்கள் உயிர் எழுத்துக்களை ஓட்டம் (motion) எனப் பெயரிட்டனர். மெய் எழுத்துக்களை உச்சரிக்குங்கால் தடை உண்டாவதால் அவைகளைத் தடை (Barriers) எனப் பெயரிட்டனர்.

மெய் உச்சரிக்கும்பொழுது நாக்கு அல்லது கீழ் உதடு மேலுள்ள அண்ணம், பல், மேல் உதடு இவைகளில் ஒற்றுவதால் உண்டாகும் ஒலிகள். எனவே, மெய் எழுத்துக்களை ஒற்றுக்கள் என்கிறோம்

கோள்

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

இக் குறளிலுள்ள 'கோள்' என்னுஞ் சொல்லிற்கு ஒழுக்க முறை (code) என்னும் பொருள் கொடுப்பது தக்கது.

இந்தச் சொல் இப்பொருள் ஏற்றே, 311, 312, 646, 662 ஆம் குறள்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

'பொறியில்' என்னுஞ் சொல்லிற்குப் 'பொறியினல்' என்னும் பொருள் கொடுக்கவேண்டும். அவ்வாருயின், 'கோள் இல்' என்னுஞ் சொல்லிற்கு 'ஒழுக்கமுறையில்லாத' (codeless) எனப் பொருள் படும்.

கண்களும், காதுகளும், வாயும், மூக்கும் நிரனிரையாக (respectively) நல்ல பொருள்களையும், கெட்ட பொருள்களையும் பார்க்கும்; நல்ல ஓசைகளையும் கெட்ட ஓசைகளையும கேட்கும்; நல்லவற்றையும், அல்லனவற்றையும் சுவைக்கும்; நல்ல மணங்களையும், கெட்ட மணங்களையும் முகரும். எனவே, இவ் வுறுப்புக்களுக்கு நல்லவைகளை ஏற்றுத், தீயவைகளை ஒதுக்கும் பண்புகள் கிடையா. ஆகையால், கெட்டவைகளைத் தவிர்ப்பதற்கு நாம் கண்களை மூடுகிரேம்; காதுகளை அடைக்கிரேம்; வாயைப் பொத்துகிரேம்; மூக்கை மூடுகிரேம்.

எனவே, இக் குறளுக்குப் பொருள் :—

ஒழுக்க முறை யற்ற பொறிகளை யுடைய தலையினல் நற்பய னில்லை; அத் தலை எண் குணத்தான் தாள்களை வணங்காவிடின் என்பது என் கருத்து.

வழக்கிற்குக் கொண்டுவர வேண்டிய 'நிரனிரை' பழஞ் சொற்கள்; தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திற்குப் பொருள் எழுதிய இளம்பூரணர் 'நிரல் நிரை' (நிரனிரை) என்பதை 'Respectively' அல்லது நிற்கும் முறைப்படி என்னும் பொருளில் பயன் படுத்தியுளார்.

(எ-கா) ஒத்து 150 'ல ன வெனவரூஉம் புள்ளி முன்னர்த்
த ந வெனவரிற் ற ன வா கும்மே'.

என்னும் ஒத்தின் இரண்டாவது வரிக்குப் பொருள் குறித்த போது 'அத் தகர நகரங்கள் நிரனிரையானே றகர னகரங்களாம்' என்று குறித்திருக்கிருர். எனவே, 'நிரனிரை' அல்லது 'நிரல் நிரை' என்னும் சொற்களை 'Respectively' என்னும் பொருளில் பயன்படுத்தி நம் வழக்கில் கொண்டுவர வேண்டும்.

விலைத்தீட்டு (Sale deed) :—'சாசனம்' என்னும் பிற மொழிச் சொல்லைப் பயன் படுத்தாது, 'விலைத்தீட்டு' என்னுஞ் சொல்லைப் பயன் படுத்தவேண்டும்.

ஒற்றிக்கலம் (Mortgage deed):—நிலத்தையோ, வீட்டையோ அடமானம் வைத்துப் பணம் வாங்கியதற்கு எழுதும் சீட்டுக்கு 'ஒற்றிக்கலம்' என்னும் பெயர் உள்ளது. இச் சொல்லை நம் மக்கள் இனிப் பயன்படுத்தவேண்டும்.

வலவன் :—பழஞ் சொற்களுக்குப் புதுப் பொருள்-பண்டைக் காலத்தில் தேர் ஓட்டியவனுக்கு 'வலவன்' என்னும் பெயர். இக்காலத்தில் மின் ஊர்தி ஓட்டுபவனுக்கு 'வலவன்' என்னும் பெயர் தக்கது.

முருகு :—இக் காலத்தில் செண்ட் (Scent) என்னும் ஆங்கிலப் பெயருள்ள நறுமணமுள்ள நீரியல் (நீர் இயல Liquidity) பொருள்களுக்கு 'முருகு' என்னுஞ் சொல் தக்கது.

பாகை :—ஒரு வட்டத்தின் 360ல் ஒரு பகுதிக்குப் பாகை என்று பெயர். வட்டத்தின் 360ல் ஒரு பகுதிக்கு ஒரு 'டிகிரி' (Degree) என்று பெயர். எனவே, 'பாகை' என்னுஞ் சொல்லை காய்ச்சலின் வெப்ப அளவைக் குறிப்பதற்கும் பயன்படுத்துவது தக்கது. ஒருவருக்கு 105° டிகிரி (Degree) காய்ச்சல் இருப்பதற்கு ஈடாக ஒருவருக்கு 105 பாகைக் காய்ச்சல் உள்ளது எனச் சொல்லவேண்டும்.

தற்காலத்தில் வழங்கும் பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்கள்.

1. Relieving centre or Relief centre—**களைகண்**=இடரையும், துன்பங்களையும் நீக்கும் இடம்.
2. Coat stand—உடை தாங்கி—உடைகளைத் தாங்கும் முளைகளும், கொக்கிகளும் உள்ள மர நிலை.
3. Short Sight—கிட்டப்பார்வை=அதாவது, அருகே உள்ளவைகளே கண்களுக்குத் தெரிவது.
4. Long Sight—தொலைப்பார்வை=தொலையிலுள்ள பொருள்களும் கண்களுக்குப் புலப்படுதல்.
5. Acstigmatism—மாறுபட்ட பார்வை. இதை 'மாறுகண்' என்று சொல்லுதல்.

வழக்கத்திலுள்ள சொற்களின் விளக்கம்

'மருவு மகள்' என்னுஞ் சொல் 'மருமகள்' என வழங்குகிறது. மருவு—பொருந்து. வேறு வீட்டில் பிறந்து வளர்ந்து நம் வீட்டில் பொருந்துபவள். அதிலும் பொருத்தப்பட்ட ஒரு

வளையலைப் பொருத்தம் தெரியாமல் தேய்ப்பதும் 'மருவுதல்' என்பது. எனவே, 'மருமகள்' என்பதற்குப் பிற வீட்டிலிருந்து நம் வீட்டில் 'கொள் வினை' யால் கட்டப்பட்டுப், பொருதல் தெரியாத படி நம் மகள் போலவே எல்லா உரிமையும், கடமையும் ஏற்று, வேற்றுமை தெரியாதபடி ஒழுகுபவள்.

பார பக்கம் :— தராசின் தண்டும் (Beam), ஊசியும் பார முள்ள பக்கமே சாயும். இதுபோல நடு நிலைமை நாடாது, பொருளாளர் பக்கமும், வல்லுனர் பக்கமும், கையூட்டு (Bribe) கிட்டும் பக்கமும் சாய்ந்து ஒழுகலைப் பாரபக்க மெனல்.

தராசின் தண்டையும், ஊசியையும், பாரத்தைத் தாங்கும் பேண் என்னும் தாங்கி ஒரு பக்கமும் சாயாது எப்பொழுதும் நடு நிலையையே நிற்கும் ஆகையால் "பேண்" என்னுஞ் சொல்லிற்கு "நடு நிலைமை" என்னும் பொருள் கொடுத்து,

> 'வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
> பிறவுந் தம்போற் செயின்' என

திருவள்ளுவர் கூறினர் போலும்.

தராசின் தண்டையும், ஊசியையும் எடுத்துக்காட்டின ஏற்று மக்களின் இழி நிலையையும், பேணின் தன்மையை எடுத்துக் காட்டாக அமைத்து மககளின் சிறந்த நடு நிலைமையையும் விளக்கிக் காட்டினார்கள். நம் முன்னோர். எனவே, 'பாரபக்கம்' தமிழ்ச் சொல். பிற மொழியார் இச் சொல்லி லுள்ள 'பக்கம்' என்பதைப் பட்சம் என மாற்றித், தங்கள் சொல்லாக்கியது மன்றி, தங்கள் சொல்லிலிருந்து தமிழ்ச் சொல் வந்ததெனக் கூறுவது விந்தையிலும், விந்தை. இப் பகுதியார் பார முள்ளவ ராகையால், அப் பக்கம் சாயும், தமிழ் மக்களும் உளர்.

தொடரும்.

168-ஆம் பக்கத்தொடர்ச்சி.

கலைமகள் விழா—மூன்றும் நாள்

நாள் : புரட்டாசி, அ (24—9—49), சனி, மாலை 5 மணி

தலைவர் : திருவாளர் S. R. நாயடு அவர்கள்,
பெருநிலக் கிழவர். நாகப்பட்டினம்.

பேருரையாளர் : திருவாளர் வித்துவான், A M. பரிமணம் அவர்கள்.

நிகழ்ச்சிகள்:

இறை வணக்கம்	—கல்லூரி மாணவர்
வரவேற்பு	—கல்லூரித் தலைவர்
தலைவர் முன்னுரை	
நகைச் சுவைச் செயல்கள்	— உமாமகேசுவர நடுநிலைப் பள்ளி மாணவர்கள்
விழாப் பேருரை	—'உளநூலும் திருக்குறளும்'
தலைவர் பேருரை	
நன்றி	—கல்லூரி விரிவுரையாளர்
வாழ்த்து	—உமாமகேசுவர நடுநிலைப் பள்ளி மாணவர்.

கலைமகள் விழா—நான்காம் நாள்.

நாள் : புரட்டாசி, கூ (25—9—49), ஞாயிறு, மாலை 5 மணி

தலைவர் : திருவாளர் பேரறிஞர்
அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள்,
பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

பேருரையாளர் : திருவாளர் கி. ஆ. பெ. விசுவநாதம்
அவர்கள், ஆசிரியர், தமிழர்நாடு, திருச்சிராப்பள்ளி.
திருவாளர் அ. சண்முக சுந்தரம் அவர்கள்,
கரந்தை.

நிகழ்ச்சிகள் : இறை வணக்கம் —கல்லூரி மாணவர்
வரவேற்பு —கல்லூரித் தலைவர்
தலைவர் முன்னுரை
பரிசில்பெறும் மாணவர் சொற்பொழிவுகள்
இன்னிசை —கல்லூரி மாணவர்
விழாப் பேருரை —(க) 'சொற்பொழிவு'
(உ) 'தமிழ்க்கொடி'
தலைவர் பேருரை
நன்றி —கல்லூரி விரிவுரையாளர்
வாழ்த்து —உமாமகேசுவர நடுநிலைப் பள்ளி மாணவர்

கலைமகள் விழா—ஐந்தாம் நாள்

நாள் : புரட்டாசி ௰, (26—9—49), திங்கள், மாலை 5 மணி

தலைவர் : திருவாளர் S. நடராச நாடார் அவர்கள்,
துணை நடுவர், தஞ்சை.

பேருரையாளர் : திருவாளர் வீ. உலக ஊழியர் அவர்கள், சேலம்.

நிகழ்ச்சிகள்: இறை வணக்கம்	—கல்லூரி மாணவர்
வரவேற்பு	—கல்லூரித் தலைவர்
தலைவர் முன்னுரை	
ஆட்டம்	—திரு. மாகதவல்லியும், தோழியரும்
விழாப் பேருரை	—'கற்றோர் சுவைக்கும் கவி'
தலைவர் பேருரை	
நன்றி	—கல்லூரி விரிவுரையாளர்
வாழ்த்து	—உமாமகேசுவர நடுநிலைப் பள்ளி மாணவர்.

கலைமகள் விழா—ஆறும் நாள்.

நாள்: புரட்டாசி, ௰௧ (27–9–49), செவ்வாய், மாலை 5 மணி

தலைவர் : திருவாளர் த. கோ. நடராசப் பிள்ளை யவர்கள்
மலையநாட்டு இந்திய அரசியல் ஆணையாளர்.

பேருரையாளர் : (௧) திருமதி மங்கையர்க்கரசி அம்மையார்
(௨) திருமதி சுந்தரமணி அம்மையார்

நிகழ்ச்சிகள் : இறை வணக்கம் —கல்லூரி மாணவர்

வரவேற்பு —கல்லூரித் தலைவர்

தலைவர் முன்னுரை

குடிமைப் பயிற்சிக் காட்சிகள் } உமாமகேசுவர நடுநிலைப் பள்ளி மாணவர்

இன்னிசைப் பாக்கள் —கல்லூரி மாணவர்

விழாப் பேருரைகள் —(௧) 'மாதர் உலகம்'
(௨) 'மாதரும் தமிழும்'

தலைவர் பேருரை

நன்றி —கல்லூரி விரிவுரையாளர்

வாழ்த்து —உமாமகேசுவர நடுநிலைப் பள்ளி மாணவர்.

கலைமகள் விழா—ஏழாம் நாள்

நாள் : புரட்டாசி, ௰உ (28—9—49), புதன், மாலை 5 மணி

தலைவர்: திருவாளர் R. கந்தசாமி மூப்பனுர் அவர்கள், வழக்குரைஞர், குடந்தை.

பேருரையாளர் : திரு. S. இராமச்சந்திரப் பத்தர் அவர்கள் தஞ்சை.

நிகழ்ச்சிகள்:

இறை வணக்கம்	—கல்லூரி மாணவர்
வரவேற்பு	—கல்லூரித் தலைவர்
தலைவர் முன்னுரை	
ஆட்டம்	—திரு. மரகதவல்லியும் தோழியரும்
மாறு வேடப் போட்டி	
விழாப் பேருரை	—'கம்பர் ஒரு வழக்கறிஞர்'
தலைவர் பேருரை	
நன்றி	—கல்லூரி விரிவுரையாளர்
வாழ்த்து	—உமாமகேசுவர நடுநிலைப் பள்ளி மாணவர்.

கலைமகள் விழா—எட்டாம் நாள்

நாள் : புரட்டாசி, ௰௩ (29-9-49) **வியாழன், மாலை** 5 **மணி**

தலைவர் : திருவாவடுதுறை ஆதீன ஆணையாளர்.

பேருரையாளர்கள் :

(க) திருவாளர் வித்துவான் ஒளவை. சு. துரைசாமி பிள்ளையவர்கள், **விரிவுரையாளர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.**

(உ) திருவாளர் கோ. சின்னையா **அவர்கள்,**
வாழைப்பாறை.

நிகழ்ச்சிகள்: இறை வணக்கம் —**கல்லூரி மாணவர்**

வரவேற்பு —**கல்லூரித் தலைவர்**

தலைவர் முன்னுரை

நாட்டியம் —**திருமதி. சூடாமணி**

விழாப் பேருரைகள் — (க) '**இலக்கிய நலம்**'
(உ) '**நாம் வாழ்வதேன் ?**'

தலைவர் பேருரை

நன்றி —**கல்லூரி விரிவுரையாளர்**

வாழ்த்து —**உமாமகேசுவர நடுநிலைப் பள்ளி மாணவர்**

கலைமகள் விழா—ஒன்பதாம் நாள்

நாள் : புரட்டாசி, ௰௪ (30–9–49) வெள்ளி, மாலை 5 மணி

தலைவர் : திருவாளர்
S. சோமசுந்தர பாரதியார் அவர்கள்
வழக்குரைஞர், பேராசிரியர், பசுமலை.

பேருரையாளர் : திருவாளர், வித்துவான்
க. வெள்ளைவாரணனார் அவர்கள்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

நிகழ்ச்சிகள் : இறை வணக்கம் —கல்லூரி மாணவர்

வரவேற்பு —கல்லூரித் தலைவர்

தலைவர் முன்னுரை

விழாப் பேருரை —'பரிமேலழகர் உரைத்திறன்'

இன்னிசை யரங்கு —திருவாரூர் திரு. ந. ச. சந்திரசேகரனாரும், கூட்டத்தினரும்

நிலையிருப்புப் பயிற்சி—செயலாலும் உரையாலும் விளக்கல்—திருவாளர்
அ. பொன்னண்ணாக் களத்தில்வென்றார் அவர்கள்,
முன்னைத் தமிழாசிரியர், செங்கரையூர்.

தலைவர் பேருரை

நன்றி —கல்லூரி விரிவுரையாளர்

வாழ்த்து —உமாமகேசுவர நடுநிலைப் பள்ளி மாணவர்

கலைமகள் விழா—நல்விடை விழா.

நாள் : புரட்டாசி, ௧௫ (1—10—49), சனி, மாலை 5 மணி

தலைவர் : திருவாளர் பேரறிஞர் (டாக்டர்)
S. மணவாளராமாநுசனார் அவர்கள்,
துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

பேருரையாளர் : திருவாளர் திருவாசகமணி
க. மு. பாலசுப்பிரமணியம் அவர்கள்,
தஞ்சை

நிகழ்ச்சிகள் : இறை வணக்கம் —கல்லூரி மாணவர்
வரவேற்பு —கல்லூரித் தலைவர்
தலைவர் முன்னுரை
விழாப் பேருரை —' சீவகாருணியம் '
நாடகம், —' திருவாதவூரர் '
திக்கற்ற மாணவர் இல்லப் பிள்ளைகள்.
பரிசு வழங்கல் —திருமதி ந. புட்பம் அம்மையார் அவர்கள், சீநிவாசபுரம், தஞ்சை.
நாள் நன்றி —கல்லூரி விரிவுரையாளர்
விழா நன்றியும் நல்விடையும் —அமைச்சர்
வாழ்த்து —உமாமகேசுவர நடுநிலைப் பள்ளி மாணவர்

மதிப்புரை.

தமிழ்ச் சாசனங்கள்: வித்துவான் திரு. வ. தங்கையா நாடார்

பதித்தது—ரூ. 3/–

சென்னைப் பல்கலைக் கழக வித்துவான், கீழ்க்கலைத் தேர்வுகளுக் குரியது. சாசன விளக்கங்களும், சிறந்த குறிப்புக்களும், இன்றியமையாது வேண்டும் ஏனைய விவரங்களும் பெருகத் தரப்பெற்றிருக்கின்றன. மாணவர் கட்குப் பேருதவியாக விருக்கும்.

மொழி அரசி.

தொகுத்த ஆசிரியர் : திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை

வெளியிட்டவர்கள் : கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார், தஞ்சை.

பக்கம் 208. விலை ரூ. 3—0—0.

இஃது இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த, வாழ்கின்ற புலவர்களின் கவிகளைக் கொண்ட ஒரு திரட்டாம். சிவ ஞான முனிவர், கம்பர் முதலியோரின் பாட்டுக்களும் இதன் கண் இடையிடையே வந்துள்ளன.

தமிழ்த் தாயை வாழ்த்திய பாடல்களே இங்கு தரப்பட்டுள்ளன. இந் நூலை ஆராயுமிடத்து, தமிழ்த்தாய் வணக்கம் பெரிதும் இக் காலத்தில்தான் உள்ளது என்று புலனாகும்.

இந் நாட்டிலிருந்தும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் வேலணை வேந்தனார் இவர்களின் பாடல்களும் இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழ்த்தாய் வணக்கம் ஒருபுறமிருக்க, தற்காலத்தார் இயற்றிய அரும்பெரும் பாடல்களை ஒருங்கு சேர்த்து, பாடிய புலவர் வரலாறுகளையும் அடிக்குறிப்பில் சேர்த்து வெளியிட்ட முறை மேனாட்டு உயர் முறைகளோடு ஒக்கும். திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையின் சீரிய உழைப்பு தமிழ் உள்ளவரையும் போற்றப்படும்.

இது மொழிஅரசியின் முதற் பாக மாகும். இது போன்ற பல தொகுதிகளை ஆசிரியர் தருவாராக. இதனைத் தொகுப்பதற்கு எவ்வளவு பணச்செலவும், காலச்செலவும், கல்வியும் வேண்டும் என்பதனைக் கற்றோரே அறிவர். பாட்டுக்களின் அரும் பதங்களையும், சந்தர்ப்பங்கள் சில வற்றையும் விளக்கியிருத்தல் மாண்புடைய செயலாகும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் இந் நூலை ஆதரித்தது அரிய தொண்டாகும்.

வானொலி நிலையம்,
கொழும்பு, 4–9–49.

வ. கந்தையா.

மேடைத் தமிழ் : குலோத்தாரக திரு. டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார், எப். ஆர். எஸ். ஏ. (இலண்டன்), 29 A. திருவேங்கட முதலித் தெரு, பார்க் டவுன் போஸ்டு, சென்னை. ரூ. 7—8—0.

இது ஒரு அருமையான நூல் ஆகும். மேடை யேறி யாவரும் விரும்பும் முறையில் பேசிப் பேரெடுக்க விரும்பு வார்க்குப் பெரிதும் பயன் தருவது. ஆசிரியர் புது முறையில் இந் நூலை எழுதித் தமிழுலகத்திற்குத் தந்தது பெரிதும் பாராட்டத் தக்கது. சிறந்த தமிழிலக்கிய வகைகளிற் சேர்த் தெண்ணத் தகுவது இந் நூல். மேடை யேறிப் பேசி அவையோர் பாராட்டை விரும்பும் சொற்பொழி வாளர் கூர்ந்து அறிந்து கடைப்பிடிக்கவேண்டிய நுணுக்கங்களையும் ஆசிரியர் எடுத்து விளக்கியுள்ளார்.

நூலின் உரை நடை எடுத்துக்கொண்ட பொருளுக் கேற்ப மிகவும் சிறப்பாக விருக்கிறது.

இத்தகைய அருமையான நூலைத் தந்த ஆசிரியருக்குத் தமிழுலகம் பெரிதும் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையது.